# 6

# பிசாசு பேய்களைப்பற்றி கிறிஸ்தவர்களின் நம்பிக்கை என்ன

*கிறிஸ்தவர்கள் பிசாசு இருப்பதை நம்புகின்றனர். இது பிசாசையே ‘‘விசுவாசிப்பது’’ போன்றதல்ல! யாரோ ஒருவர் ‘‘நான் கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்’’ என்று சொல்லுவாராகில் அவர் கிறிஸ்து இருக்கிறார் என்று அறிக்கையிடுவதாக மாத்திரம் பொருளல்ல, ஆனால் அவர் கிறிஸ்து தன்னை இரட்சிக்க முடியும், இரட்சிப்பார் என்று விசுவாசிக்கிறார். கிறிஸ்தவர்கள் இரட்சிப்பினிமித்தம் கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள். ஆனால் யாருமே, அந்த அர்த்தத்தில் பிசாசை விசுவாசிக்கக் கூடாது. மாறாக, கிறிஸ்துவை பின்பற்றுவோர் பிசாசும் அவனுடைய பேய்களும் இருப்பதை நம்புகிறார்கள். பிசாசானவன் பொல்லாங்கானவன், மனுக்குலத்துக்கு அவன் எண்ணில்லாத் தீமைகளைச் செய்கிறான். இந்தக் கருத்துக்களை ஒருவர் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்? ஏனெனில் திருமறை அவைகளைப் போதிக்கிறது!*

*ஜனங்களுக்குள்ளே பிசாசைக்குறித்து விசித்தரமான நம்பிக்கைகள் விளங்குகின்றன. அவன் நரகத்துக்கு உரிமையாளன் - சிவப்பான உடை அணிந்து, கொம்புகளையும் அம்பு வடிவத்தில் முடியும் நீண்டவால் உடையவனாய், திரிசூலம் போன்ற கூரிய முள் கரண்டிக்கு ஒப்பான ஆயுதத்தைக் கையில் பிடித்தவனாய், அக்கினியைக் கிண்டிக் கொண்டிருப்பவனாய், நரகத்துக்கு அனுப்பப்படுவோரை உபத்திரவப்படுத்துகிறவனாய் காட்சியளிக்கிறான். “அவன் ‘கோரமான’ உருவத்திலிருந்து ‘பிறாண்டிப் போடும் நம்முடைய பழங்காலத்து உருவம்’ வரைக்கும் பலவகையிலும் உள்ளவன் என்று அழைக்கப்படுகிறான்.”[1] பிசாசு தன்னைத் தொழுதுகொள்ளும் கூட்டத்தைக் கூட கொண்டிருக்கிறான்: கிறிஸ்தவத்தை அறிக்கையிடுவதாக பறைசாற்றுகிற ஒரு சிலர் பேய் பிடிப்பதாகக் கருதுகின்றனர்; பிசாசின் கதைகளைப் பேசுவதையோ நினைப்பதையோ சிலர் தவிர்க்கின்றனர். ஏவப்பட்ட வசனங்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் பிசாசு என்று ஒன்று இருப்பதையே சந்தேகிக்கின்றனர். திருமறை பிசாசானவனையும் அவன் உதவியாளர்களையும் குறித்து சொல்லுவது என்ன?*

## அவனுடைய மெய்ம்மை

முதலாவதாக பிசாசு இருப்பது உண்மையென திருமறை போதிக்கிறது. அவனது மெய்ம்மையை வேத வசனங்கள் சாட்சியிடுகின்றன. அவன் ஒரு உருவமில்லா சக்தி மாத்திரமல்ல; மாறாக அவனும் அவனோடு கிரியை செய்கிற பேய்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய (ஆவிகளின்

உலக) ஜீவிகள், அவர்கள் புத்திக் கூர்மையுடைய நபர்கள்; அவர்கள் ஒன்றை அறிந்து கொள்ளவும், சிந்தனை செய்யவும், பேசவும், செயல்படவும் திறமை பெற்றவர்கள்.

திருமறையில், பிசாசானவன் ஏராளமான வழிகளில் குறிப்பிடப்படுகின்றான். அவன் "பிசாசானவன்" (Gk.: *diabolos*), என்று அழைக்கப்படுகிறான், அதன் பொருள் "குறை கூறித்திரிபவன்" (மத்தேயு 4:1). அவனை "சாத்தான்" என்றும் திருமறை குறிப்பிடுகிறது (Gk.: *Satanas*), இதன் பொருள் "எதிராளி" என்பது இதை பிசாசினுடைய தனிப்பட்ட பெயராகப் பயன்படுத்தலாம் (1 நாளாகமம் 21:1; சகரியா 3:1; யோபு 1:7; மத்தேயு 4:10; லூக்கா 10:18; 22:31 ஆகிய வசனங்களைக் காண்க). அவன் நம்முடைய எதிராளி (1 பேதுரு 5:8). அவன் "பெயெல்செபூல்" என்றும் (மத்தேயு 10:25; "பெயெல்செபூப்" என்று KJV) குறிப்பிடுகிறது, பெரிய வலுசர்ப்பம் மற்றும் பாம்பு என்றும் அழைக்கப்பட்டது (வெளிப்படுத்தின விசேஷம் 12:9).[2]

பிசாசானவன் எங்கே தோன்றினான்? திருமறை எதுவும் குறிப்பிடுவதில்லை. இரண்டு சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன: ஒன்று நித்திய நித்தியமாய் தேவனோடு இருந்திருக்க வேண்டும், அல்லது அவன் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அவன் தேவனோடு நித்தியமாக இருந்திருக்க முடியாது. அப்படியிருந்திருப்பானேயானால், அவனை தேவனுக்கு சமமானவனாக்கி விடும், எனவே இந்த சாத்தியக்கூறு புறக்கணிக்கப்படுகிறது. தேவன் ஒருவர் மட்டுமே நித்தியமானவர். ஒன்றுக்கொன்று எதிரெதிராய் செயல்படும் இரண்டு சக்திகளாகிய நல்லதும் தீமையும் நித்தியத்துக்கும் ஒன்றாக நிலைத்திருக்க முடியாது. ஆகையால், பிசாசானவன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கத்தான் வேண்டும்.

பிசாசானவன் சிருஷ்டிக்கப்பட்டிருப்பானேயானால், அவன் ஒன்றேல் பொல்லாங்கான சக்தியாக உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது நல்லதொரு ஜீவியாக உருவாக்கப்பட்டு தீமையைத்தானாக தெரிந்து கொண்டிருக்கவேண்டும். நல்லவராகிய தேவன், ஒரு பொல்லாங்கான சக்தியை உருவாக்கியிருக்க முடியாது, விசேஷமாக (எல்லாவற்றையும் சிருஷ்டித்து முடித்த பிறகு) "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாகயிருந்தது" (ஆதியாகமம் 1:31அ) என்று திருமறை கூறுகிறது. எனவே, பிசாசானவன் நல்ல ஒரு ஜீவியாக உண்டாக்கப்பட்டு ஆனால் பொல்லாங்கனாய் மாறியிருக்க வேண்டும் என்கிறமுடிவுக்கு நாம் வருகிறோம்.

பிசாசானவன் ஒரு விழுந்துபோன தூதன் என்று கிறிஸ்தவர்கள் பாரம்பரியமாக விசுவாசித்தனர். யூதா 6ம் 2 பேதுரு 2:4ம் பாவம் செய்து பரலோகத்திலிருந்து தள்ளிவிடப்பட்ட தூதர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. வெளிப்படுத்தின விசேஷம் 12:9ல், "பூமியிலே விழத்தள்ளப்பட்ட" பிசாசானவனைப் பற்றிக் குறிப்பிடுவதால், பிசாசானவனின் தோன்றலைக்கூட குறிக்கக் கூடும் (மேலும் காண்க ஏசாயா 14:12-15). "பிசாசு அடைந்த ஆக்கினை" (1 தீமோத்தேயு 3:6) என்பது பரலோகத்தில் இருக்கும் போது தூதனானவன் செய்த கலகத்தினால் அடைந்த ஆக்கினைத் தீர்ப்பைக் குறிக்கக் கூடும்.

தேவன் சிருஷ்டித்த தூதர்கள் அவருக்கு எதிர்த்து நின்றதாகக் காணுகிறது, அநேகமாக அது மேட்டிமையால் செயல்படுத்தப் பட்டதாக இருக்கலாம். அவர்கள் "தங்களுக்குரிய வாசஸ்தலத்தை" விட்டு விட்டார்கள் (யூதா 6), ஆனால் தேவனுடைய ஸ்தானத்தை பெறமுயற்சித்தார்கள். கலகத்தை நடத்தியவன்

வல்லமை மிகுந்த தூதன் பின்பு பிசாசாக மாறினான். தேவன் அவனையும் அவனைப் பின்பற்றினவர்களையும் பரலோகத்திலிருந்து கீழே தள்ளி நித்திய ஆக்கினைக்கென்று அவர்களை நியமித்தார். விழுந்து போன இந்த தூதர்கள் சாத்தானாக மாறி அவனை பின்பற்றினவர்கள் பேய்களாக மாறினர்.

## அவனது இயல்பு தீமையின் உருவம்

யோவான், "பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்" என்று எழுதினார் (1 யோவான் 3:8அ). இயேசு தம்மை எதிர்த்த சிலரிடம், இவ்வாறு சொன்னார்.

> நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சையின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாத படியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்க வில்லை; அவன் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவான் 8:44).

பிசாசைக் குறித்து ஜனங்கள் வேடிக்கையாக (தமாஷாக) பேசுவதுண்டு, ஆனாலும் உண்மையில் நாம் சிரிக்கக்கூடிய அளவுக்கு சாத்தான் எந்த காரணத்தையும் கொடுக்க வில்லை. அவன் மிகப்பயங்கரமானவனும், இழிவானவனும், தீய எண்ணம் உள்ளவனும் ஒரு பொழுதும் இருந்திராத ஒரு சிருஷ்டியுமானவன்.

## நமது எதிராளியாக அவனது செயல்

களைகளைப் பற்றிய உவமையில், விவசாயியின் கோதுமைத்தோட்டத்தில் களைகளை விதைத்த இராஜ்யத்தின் சத்துருவாக சித்தரிக்கப்படுபவன் சாத்தான்தான் (மத்தேயு 13:38, 39). "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான்" (1 பேதுரு 5:8) என்று பேதுரு எழுதினார்.

பிசாசானவன் ஜனங்களை பாவஞ்செய்யத் தக்கதாக ஜனங்களைத் தூண்டுகிறான். அவன் வனாந்திரத்தில் இயேசுவை சோதித்தான் (காண்க மத்தேயு 4:1-11; மாற்கு 1:12, 13; லூக்கா 4:1-13). அவன் இயேசுவைக் காட்டிக் கொடுக்கத் தக்கதான எண்ணத்தை யூதாஸின் இருதயத்தில் கொடுத்தான் (யோவான் 13:2; காண்க லூக்கா 22:3), பேதுரு கிறிஸ்துவை மறுதலிக்க வைக்க வகை தேடினான் (காண்க லூக்கா 22:31, 32). இருதயத்தில் கோபத்திற்கு இடங்கொடுத்தலினால் நம்மை பாவஞ்செய்ய வைப்பதன் மூலம் "சாத்தானுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதாகும்" (எபேசியர் 4:27). ஜனங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள மனதில்லாமல் போகக் காரணம், பிசாசானவன் "வந்து அவர்களுடைய இருதயத்திலிருந்து வசனத்தை எடுத்துப் போட்டு, விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடி செய்வதுதான்" (லூக்கா 8:12).

## தனது நோக்கத்தை நிறைவேற்ற அவனது வஞ்சகம்

*பிசாசு அறியாமையுள்ளவனல்ல. பாவத்தை எப்படி கவர்ச்சிகரமாக முன்வைப்பது என்று அவனுக்குத் தெரியும். பாவத்தில் பிரியப்படத்தக்க வகையில் பொய்த்தோற்றத்தை உண்டு பண்ணுவதில் அவன் வல்லவன், ஏதேன் தோட்டத்தில், தேவனுடைய செய்தியில் ஒரு வார்த்தையை மாத்திரமே மாற்றினான். தேவன் "நீ சாகவே சாவாய்," என்று சொல்லியிருக்க, பிசாசானவன் "நீங்கள் ... சாகவே சாவதில்லை" என்றான் (ஆதியாகமம் 3:3, 4). பிறகு தேவனுடைய எண்ணங்களை கேள்விக் குறியாக்கி ஏவாளை மயக்கினான்; தேவன் பொறாமையுள்ளவரும் தமது வல்லமையின் அதிகாரத்தையும் ஞானத்தையும் மனித வார்க்கத்துடன் அவர் பகிர்ந்து கொள்ள விரும்புவதில்லை என்றும் குறிப்பிட்டான் (ஆதியாகமம் 3:5). மேலும் விலக்கப்பட்ட கனியை புசிப்பதினால் உண்டாகும் அனுகூலங்களையும் சுட்டிக் காட்டினான். (அது "புசிப்புக்கு நலமான உணவு" என்றும், "கண்களைத் நிறக்கக் கூடியதும்," "புத்தியை தெளிவிக்கக் கூடியது" என்றும் சுட்டிக் காட்டினான்; ஆதியாகமம் 3:5, 6அ.) பிசாசினால் ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள் (2 கொரிந்தியர் 11:3; 1 தீமோத்தேயு 2:14), கனியைப் புசித்தாள், ஆதாமையும் அப்படியே செய்ய வைத்தாள் (ஆதியாகமம் 3:6ஆ). இது பேராபத்துடன் முடிந்தது.*

*இன்றும் சாத்தான் தொடர்ந்து தன்னுடைய வஞ்சகத்தை செயல்படுத்துகின்றான்; "அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறான்" (2 கொரிந்தியர் 11:14) "பிசாசின் உபதேசங்களைப் போதிக்கிறான்" (1 தீமோத்தேயு 4:1) தனக்கு சீஷர்களை ஆதாயப்படுத்துகிறான் - ஆகையால் புதிய ஏற்பாடு "பிசாசின் தந்திரங்களுக்கு" (எபேசியர் 6:11) "பிசாசின் கண்ணிக்கும்" (2 தீமோத்தேயு 2:26) கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறது.*

*பிசாசானவன் தன்னுடைய இயல்பான தோற்றத்தில் வந்து நம்மை பாவஞ் செய்யத் தூண்டுவானாகில், நாம் சோதனையில் கவரப்படமாட்டோம். மாறாக, பிசாசானவன் ஜனங்களை வசீகரித்துப் பாவஞ்செய்யத் தூண்டி இயன்றவரை கவர்ச்சிகரமான மக்களையும் முறைகளையும் பயன்படுத்தி செயலாற்றுகிறான். இப்படியாகத்தான் அவன் நம்மை வஞ்சித்து அவனுடைய கண்ணியில் விழ வைக்கிறான்.*

## அவனுடைய அளவிடப்பட்ட வல்லமை

*பிசாசு வலிமையுடையவன். யோபு புத்தகத்தில், அவன் தனது குறிக்கோளை நிறைவேற்ற, இயற்கை சக்திகளையும், மோசமான மனுஷர்களையும், வியாதியையும் அவனால் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. பிசாசின் வல்லமை திருமறையின் வாக்கியத்தால் சான்றளிக்கப் பட்டது "உலகம் முழுவதும் பொல்லாங்கானுக்குள் கிடக்கிறது" (1 யோவான் 5:18, 19). வெளிப்படுத்தின விசேஷம் 12:9 இந்தக் கருத்தை உறுதி செய்து சாத்தான் "உலகம் முழுமையும் மோசம் போக்குகிறான்" என்று சொல்லுகிறது.*

*ஆகிலும், பிசாசின் வல்லமை அளவிடப்பட்டது. தேவன் சர்வவல்லவர் (அனைத்து - வல்லமைகளையும் பெற்றவர்), சர்வ ஞானி (எல்லாவற்றையும் அறிந்தவர்), சர்வ வியாபி (எங்கும் - இருப்பவர்); பிசாசு அப்படிப்பட்டவனல்ல; எதிர்காலம் குறித்து அவனுக்குத் தெரியாது, உதாரணமாக, ஜனங்களுடைய*

இருதயங்களையும் அவனால் அறியமுடியாது.[3] தனிப்பட்டவர்களை சோதிப்பதற்கு தேவன் அனுமதிக்கிறார், ஆகிலும் அப்படிச் செய்ய அவனுக்கு அளவிட்ட வல்லமையையே அனுமதிக்கிறார். பவுல், தேவன் ''உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடுக்க மாட்டார்'' என்றார் (1 கொரிந்தியர் 10:13). ஒருவரை சோதிக்கிற விஷயத்தில் பிசாசினுடைய வல்லமையை மட்டுப்படுத்தும் பொருட்டு செய்த செயலை யோபுவின் வரலாறு முன் உதாரணத்தைக் காட்டுகிறது. எனவே, கிறிஸ்தவர்கள், பிசாசின் சோதனைகளை எதிர்த்துப் போராடத் தேவையான உதவிகளைப் பெற்றிருக்கிறார்கள். சகோதரர்கள் "பிசாசுக்கு இடங்கொடுக்காதபடிக்கு" தொடர்ந்து கோபத்தில் நிலைத்திருக்க வேண்டாம் என்று பவுல் சொன்னார் (எபேசியர் 4:27) "பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாயுமிருக்கும்படிச் சொன்னார்" (எபேசியர் 6:11). யாக்கோபும் ''பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" என்று சொன்னார் (யாக்கோபு 4:7).

ஜனங்கள் சில வேளைகளில், வேடிக்கையாக, "பிசாசு என்னை இப்படி செய்ய வைத்தது" என்று சொல்லுவது உண்டு! உண்மையில், பிசாசு நம்மை எதையும் செய்யவைக்க முடியாது! பாவஞ்செய்ய ஜனங்களை அவன் சம்மதிக்கப் பண்ணுகிறான்; பாவஞ் செய்ய ஏதுவான எல்லாவித தந்திரங்களையும் பயன்படுத்தி நம்மை வஞ்சிக்கவும் பாவஞ்செய்ய ஏதுவான வாய்ப்புகளை நமக்கு கொடுத்தும் சோதிப்பான் - ஆகிலும் அவன் நம்மை பாவம் செய்ய வைப்பதில்லை, *வைக்க* முடியாது. நம்முடைய இச்சைகளை நிறைவேற்றுவதற்கு, பிசாசின் சோதனைகளுக்கு நம்மை உட்படுத்த நாம் தேர்ந்து கொள்வதால் தான் நாம் பாவஞ் செய்கிறோம் (யாக்கோபு 1:13, 14).

பிசாசின் செல்வாக்கிலிருந்து கிறிஸ்தவர்கள் எப்படி மேற்கொள்ள முடியும்? முதலாவதாக, அவனுடைய வலிமையை உணர்ந்து கொண்டு, நாம் சோதனைக்கு உட்படுத்தும் காரியங்களிலும் மக்களிலும் அவன் இருப்பதைக் குறித்து எச்சரிக்கையடைய வேண்டும். நாம் சோதனையில் எப்பொழுது வேண்டுமானாலும் விழுந்து விடக்கூடும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, தேவனுடைய வசனங்களை நாம் இருதயத்திலும் மனதிலும் வைத்திருந்து, இயேசுவைப் போல, நாமும் "எழுதியிருக்கிறது,'' என்று சோதனை வரும் பொழுதெல்லாம் சொல்லலாம். மூன்றாவதாக, நம்மை பாதுகாத்துக்கொள்ள "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் நாம் தரித்துக் கொள்ள வேண்டும்" (காண்க எபேசியர் 6:10-17). அப்படிச் செய்வதால், "பிசாசின் தந்திரங்களோடு" நாம் திராணி பெற்று எதிர்த்து நிற்க முடியும். நான்காவதாக, பிசாசானவன் சத்தியத்திலிருந்து தனது பொய்யை வித்தியாசப்படுத்திக் காட்டி நம்மை வஞ்சிக்க அவன் அறிந்திருக்கிறான் என்பதை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும். ஐந்தாவதாக, ஜெபத்தின் மூலம் கர்த்தருடைய உதவியைத் தேட முடியும். தேவன் "உலகத்திலிருக்கிறவர்களிலும் ... பெரியவர்'' என்பதால், அவருடைய உதவியைக் கொண்டு நாம் வெற்றிகொள்ள முடியும் (1 யோவான் 4:4ஆ). இறுதியாக, "பிசாசை எதிர்த்து நிற்க" நாமே நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும் (யாக்கோபு 4:7). அவனுடைய முன்னேற்றத்துக்கு எதிராக நம்மை நாம் உறுதிப்படுத்திக் கொள்வோமாக. தேவனுடைய சித்தத்தைச் செய்ய விரும்பும் நமது முடிவு தவறாகாதிருப்பதாக! நாம் பெலம் பெற்று, தேவனுடைய

உதவியினாலே, நமது எதிராளியை நாம் தோல்வியடையச் செய்ய முடியும் என்று அறிவோமாக!

## அவனுடைய அநேக பேய்கள்

பிசாசானவன் ‘‘பேய்களின் சேனைகளாலே’’ (Gk.: *daimōnia*), உதவிசெய்யப்படுகிறான்.[4] இவர்கள் “அசுத்த ஆவிகள்” என்றும், “கெட்ட ஆவிகள்’’ என்றும் ‘‘பிசாசின் தூதர்கள்’’ (‘‘செய்தியாளர்கள்’’ அல்லது “முகவர்கள்” என்று பொருள்; மத்தேயு 25:41) என்றும் பேசப்படுகின்றனர். இந்தப் பேய்களைக் குறித்து புதிய ஏற்பாடு அடிக்கடி பேசுகிறது. இயேசு பேய்களை விரட்டினார் (மாற்கு 1:34; லூக்கா 4:33-35), பெயெல்செபூலின் வல்லமையால் அவர் அவைகளை விரட்டுவதாக அவரது எதிரிகளால் குற்றஞ் சாட்டப்பட்டார் (மத்தேயு 12:24). இதே போன்ற அற்புதங்களை அவரது சீஷர்களும் செய்வார்கள் என்று இயேசு வாக்குத்தத்தம் செய்தார் (மத்தேயு 10:1; மாற்கு 3:15; 16:17), அவர்களும் செய்தார்கள் (லூக்கா 10:17; நடபடிகள் 8:7; 16:18; 19:12). “பேய்களும் விசுவாசித்து நடுங்குகின்றன” என்று யாக்கோபு சொன்னார் (யாக்கோபு 2:19).

பேய்கள் இன்றும் செயல்படுகின்றனவா? ஆம், ஆனால் புதிய ஏற்பாட்டு நாட்களில் செயல்பட்டது போலல்ல. முதல் நூற்றாண்டில், ஜனங்களுடைய விருப்பத்துக்கு எதிராக, அவர்களை பிடித்துக் (ஆட்) கொண்டார்கள். அப்படிப்பட்ட பேய்களை விரட்டும்படி அப்போஸ்தலர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆயினும், கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, “துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, ... அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்’’ (கொலோசெயர் 2:14, 15; காண்க எபிரெயர் 2:14). கிறிஸ்து சிலுவையில் மரிப்பதை பிசாசு விரும்பித் தேடினான் (நடபடிகள் 2:23), அப்படிச் செய்வதால் கடைசியில் தனது நீண்ட எதிரியாகிய தேவன் மீது தான் வெற்றி கொள்ள இயலும் என்று நம்பினான், மாறாக, சாத்தானுடைய அந்த எண்ணமே கிறிஸ்து வெற்றிகொள்வதற்கு அடையாள குறியாகி, அவர் சாத்தானை தோற்கடித்தார். கிறிஸ்துவின் மரணத்தின் மூலம், பேய் பிடித்து ஜனங்களை ஆட்கொள்ளும் பேய்களின் வல்லமை உடைபட்டு போயிற்று!

இன்று பேய்கள் மனிதர்களை பிடிப்பதில்லை, மேலும் அப்படிப்பட்ட பேய்களை விரட்ட அதிகாரம் பெற்றவர்களும் ஒருவருமில்லை. இருப்பினும், பேய்கள் இன்னமும் இருக்கின்றன, தங்களுடைய எஜமானனுடைய குறிக்கோள்களை நிறைவேற்றும்படி அவனுக்காக தொடர்ந்து பணியாற்றுகின்றன. அவைகள் _போதித்து_ ஜனங்களிடத்தில் _செல்வாக்குப் பெற்று_ தவறுகளைச் செய்ய தூண்டுகின்றன, ஆகிலும் அவர்கள் பொல்லாங்கனாக _பலவந்தம்_ பண்ணுவதில்லை.

ஜனங்களும் பிசாசின் நிமித்தம் ஊழியஞ் செய்கின்றனர். உதாரணமாக, இயேசு சிலுவைக்குப் போகக் கூடாது என்று பேதுரு சொன்னபோது, இயேசு தமது மீட்பின் பணியை முடிக்கக் கூடாதபடிக்கு அவரை சோதித்துக் கொண்டிருந்தான். பிசாசின் பணிக்கு அவர் (பேதுரு) உதவிசெய்வது போலிருந்தபடியால், இயேசு அவரிடத்தில் “அப்பாலே போ சாத்தானே!” என்று சொன்னார் (மத்தேயு 16:23). ஒருவர் பிசாசின் கிரியைகளைத் தானும்

*செய்வதிலே நிலைத்திருப்பதும், அவனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் போவதுமாய் இருக்கும் போது, அவன் "பிசாசு" என்று அழைக்கப்படுவதும் அல்லது பிசாசின் பிள்ளை என்று பேசப்படுவதும் இயல்பு (யோவான் 6:70; 8:44; காண்க 1 யோவான் 3:8, 10). ஜனங்கள் தவறு செய்யும்படி நம்மை ஊக்கமளிக்கும்போது, அவர்கள் பேதுருவைப் போல, கிறிஸ்துவின் நாட்களில் - பிசாசின் பணியைச் செய்கிறார்கள்.*

## நரகத்தில் அவனுடைய முடிவான விதி

*"பிசாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும்" ஆயத்தம் பண்ணின இடம் நரகம் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 25:41). வெளிப்படுத்தின விசேஷத்தில் மிகப்பெரிய போராட்டக் காட்சி விவரிக்கப்பட்டபின் முடிவில் - தேவனுடைய சக்திகளுக்கும் தீய சக்திகளுக்கும்மிடையே நடந்த யுத்தத்தின் முடிவில் - அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்க தரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 20:10). மற்றவர்களை நரகத்திலே வாதித்துக் கொண்டிருப்பதற்குப்பதில், வாதிக்கப்படுவோரோடு பிசாசும் ஒருவனாயிருப்பான்! நரகத்தின் உரிமையாளனாக இருப்பதற்குப் பதில், பிசாசானவன் நரகமாகிய சிறையில் நித்தியத்துக்குமான கைதியாக இருக்கப் போகிறான்!*

## முடிவுரை

*பிசாசு மற்றும் அவனுடைய பேய்களைக் குறித்த திருமறையின் இந்த உபதேசங்களைப் பற்றி கிறிஸ்தவனின் பதில் கிரியை எப்படிப்பட்டது? பிசாசு இருக்கிறான் என்று விசுவாசிக்க வேண்டும், அவனது தந்திரங்களைக் குறித்த அறிவு நமக்கு இருக்க வேண்டும், நம்மை வழிவிலகிப் போகச் செய்கிற அவனது வழிகாட்டலிலிருந்து காத்துக் கொள்ள நம்மால் இயன்ற வரை முயல வேண்டும்.*

*இரண்டு உண்மைகளில் நாம் ஆறுதல் அடைய முடியும், முதலாவதாக, பிசாசினால் நாம் மேற்கொள்ளப்படக் கூடாது. அவனது சோதனையில் நாம் விழுந்து போகாதிருப்போமானால் நம்மீது அவனுக்கு எந்த வித அதிகாரமுமில்லை. பிசாசின் வலிமையைக் கண்டு நாம் சோர்ந்து போகும்போதும் அவனது செயலுக் கென்று இருக்கும் ஆயுதங்களையும் கண்டு மிரளும் போதும், அவனைப் போலவே நமக்கும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் இருக்கின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தேவன் நம்முடைய அன்பின் தேவன், இயேசு கிறிஸ்து நம்முடைய பிரதான ஆசாரியர், பரிசுத்த ஆவி நமக்குள் வாசம் பண்ணி நம்மை பெலப்படுத்துகிறார், மற்றும் தேவ தூதர்கள் நமக்கு ஊழியஞ் செய்யும்படி இருக்கின்றனர் (எபிரெயர் 1:14). 1 யோவான் 4:4 சொல்லும் "உலகத்திலிருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்" போன்ற வசனங்களால் நாம் ஊக்கப்படுத்தப்பட முடியும்.*

*இரண்டாவதாக, பிசாசானவன் முடிவாக தேவனால் தோற்கடிக்கப்பட்டு நித்தியத்துக்கும் நகரத்தில் தள்ளப்படுவான். சாத்தானுக்கு வரவிருக்கிற உறுதியான தோல்வி குறித்து சந்தோஷப்படுவோமாக, ஆனால் நாம்*

அவனோடே கூட அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே நித்தியத்திலே பங்கடைய மாட்டோம் என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்வோமாக.

---

குறிப்புகள்

[1]J. J. Turner, " 'The Devil Made Me Do It,' " *Firm Foundation* 88 (9 November 1971): 712. [2]*அவன் "இந்த உலகத்தின் அதிபதி" என்றும் அழைக்கப்படுகிறான் (யோவான் 12:31; 16:11; காண்க 14:30), "ஆகாயத்து பிரபு" (எபேசியர் 2:2) மற்றும் "பொல்லாங்கன்" (மத்தேயு 13:19; 1 யோவான் 2:13). மேலும், "இப்பிரஞ்சத்தின் அதிபதி" என்று 2 கொரிந்தியர் 4:4ல் குறிப்பிடப்படுகிறான்.* [3]Wayne Grudem, "Satan and Demons," *Systematic Theology* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1994), 415-16. [4]KJV *டெய்மொனியா எனும் கிரேக்க வார்த்தையை அடிக்கடி "பிசாசு" அல்லது "பிசாசுகள்" என்றே மொழிபெயர்த்துள்ளனர்; உதாரணமாக, மத்தேயு 7:22; 9:33, 34; 10:8, ஐக் காண்க "பேய்" அல்லது "பேய்கள் என்பது* NASB *திருமறையில்" கூறப்பட்டுள்ளது, இது மிகவும் துல்லியமான மொழிபெயர்ப்பு, பிசாசு ஒருவன் மட்டுமே, ஆனால் பேய்கள் அநேகம்.*